மாணவர் பெயர்:

வகுப்பு: பிரிவு:

பள்ளியின்பெயர்:

# ஐந்தாம் வகுப்புத் தமிழ் மாதிரி வினாத்தாள் (2019–2020)

காலம் அளவு: 2 மணி 30 நிமிடம் மதிப்பெண்கள்: 60

**அறிவுரைகள்:**

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச்சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.
2. நீலம் (அல்லது) கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்குப்பென்சில் பயன்படுத்த வேண்டும்..

## பிரிவு – அ

1 முதல் 10 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து எழுதுக. 10 x 1 = 10

1. 'இல்லம்' – இச்சொல்லின் பொருள் ________ .

அ) காடு

ஆ) கடை

இ) வீடு

ஈ) கோயில்

2. 'கழை' – இச்சொல்லின் பொருள் ________ .

அ) ஆல்

ஆ) மா

இ) பலா

ஈ) கரும்பு

3. 'மகிழ்ச்சி' – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ________ .

அ) வருத்தம்

ஆ) இன்பம்

இ) நிம்மதி

ஈ) கஷ்டம்

4. சந்தையில் தங்கத்தின் விலை மிக உயர்ந்ததால் வாங்குபவர்கள் ________ .

அ) விழுந்தனர்

ஆ) நிறைந்தனர்

இ) குறைந்தனர்

ஈ) பெருகினர்



5th model qustion.indd 1 1/22/2020 2:53:55 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

5. 'புத்தாண்டு' – இச்சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ________ .

அ) ☐ புத் + ஆண்டு

ஆ) ☐ புத + ஆண்டு

இ) ☐ புதுமை + ஆண்டு

ஈ) ☐ புத்தா + ஆண்டு

6. 'தேர்ந்து + எடுக்க' – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________ .

அ) ☐ தேர்ந்துஎடுக்க

ஆ) ☐ தேர்ந்தேடுக்க

இ) ☐ தேர்ந்துதெடுக்க

ஈ) ☐ தேர்ந்தெடுக்க

7. முத்துவின் உள்ளங்காலில் ஒரு கொப்புளம் இருந்தது. அப்பா அவனிடம், "நீ ________ கால்பந்து போட்டியில் விளையாடுவாய்?" என்று கேட்டார்.

அ) ☐ என்ன

ஆ) ☐ எங்கே

இ) ☐ எப்படி

ஈ) ☐ ஏன்

8. சோளம் என்பது, ஒரு ________

அ) ☐ தினை

ஆ) ☐ திணை

இ) ☐ திநை

ஈ) ☐ திண்ணை

9. பசுக்களின் இருப்பிடத்தைக் குறிக்கும் மரபுச்சொல் எது?

அ) ☐ கொட்டில்

ஆ) ☐ தொழுவம்

இ) ☐ பட்டி

ஈ) ☐ பண்ணை

10. "தமிழ்ச்செல்வியின் ஆணைக்கு அனைவரும் பணிந்தனர்." – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குரிய பொருளைத் தெரிவுசெய்து எழுதுக.

அ) ☐ கேள்வி

ஆ) ☐ கட்டளை

இ) ☐ பெருமை

ஈ) ☐ அடக்கம்

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

11. கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து பொருத்தமான சொல்லைப் பயன்படுத்தி, உரைப்பகுதியை நிறைவு செய்க. 5 x 1 = 5

(பொழுதைப், எல்லாம், எங்கே, நன்றாகச், அப்படியே, நடப்பது)

இந்தக் கோடை விடுமுறைக்கு நீங்கள்_____________ போகப் போகிறீர்கள்?

அறிவழகன் தன் தாத்தா வீட்டிற்குப் போக நினைத்தான். தாத்தா, கதை____________.

சொல்வார். அதைக் கேட்கும்போது, அந்தக் காட்சிகள் ______________ கண்

முன்னே___________ தோன்றும். ஊர் போய்ச் சேர்ந்ததும் பலவகையான கதைகளைக்

கேட்டுப்_______________ போக்க அறிவழகன் விரும்பினான்.

## பிரிவு – ஆ

**12 முதல் 17 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து எழுதுக. 6 x 1 = 6**

12. மான் புல் ___________ .

அ) ☐ பறித்தது
ஆ) ☐ மேய்ந்தது
இ) ☐ வெட்டியது
ஈ) ☐ முருக்கியது

13. ரம்யாவிற்குச் சூடான தோசை பிடிக்கும்; _____________, அவள் தம்பிக்குக் குளிர்ச்சியான பாதாம் பால்தான் பிடிக்கும்.

அ) ☐ இவற்றால்
ஆ) ☐ ஏனென்றால்
இ) ☐ அதனால்
ஈ) ☐ ஆனால்

14. காகம், நீரைத் தேடி_____________ பறந்து கொண்டிருந்தது.

அ) ☐ ஆடிஓடிப்
ஆ) ☐ மேலும்கீழுமாய்
இ) ☐ வந்தும்போயும்
ஈ) ☐ அங்குமிங்குமாய்

15. தொடர் வண்டி பாலத்தின் மீது ______________ எனச் சென்றது.

அ) ☐ சலசல
ஆ) ☐ படபட
இ) ☐ சடசட
ஈ) ☐ கடகட

16. பிறமொழிச் சொல் எது?

அ) ☐ மகிழுந்து
ஆ) ☐ டேபிள்
இ) ☐ சட்டை
ஈ) ☐ அரிசி





Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

17. பிழையின்றி எழுதப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

அ) ☐ அற்றல்

ஆ) ☐ ஆர்ரள்

இ) ☐ ஆற்றல்

ஈ) ☐ ஆற்றள்

18. கீழ்க்காணும் மரபுத் தொடர்களுக்குரிய பொருளை எழுதுக. 2 x 1 = 2

i. கரையேறுதல் ____________________________________.

ii. தலையில் வைத்துக் கொண்டாடுதல் ____________________________.

19. சொற்களை முறைப்படுத்திப் பொருளுடைய தொடராக மாற்றுக. 1 x 2 = 2

உயிருக்கு இன்பத்தமிழ் நேர் எங்கள்.

20. பின்வரும் தொடரிலிருந்து பெயர்ச்சொல், வினைச் சொல்லை எடுத்து எழுதுக. 2x 1 = 2.

சோமு படித்தான்.

பெயர்ச்சொல்: __________ வினைச்சொல்:______________.

## பிரிவு – இ

**பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, 21 முதல் 25 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து எழுதுக.** 5 x 1 = 5

### ஏறுதழுவுதல்

தமிழரின் வீரத்தைப் பறைசாற்றும் விளையாட்டுகளுள் ஒன்று, ஏறுதழுவுதல். ஏறு என்பது, காளைமாட்டைக் குறிக்கும். ஏறுதழுவுதல் என்பது, காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும். இவ்விளையாட்டு, பழங்காலந்தொட்டு இன்றுவரை விளையாடப்பட்டு வருகிறது. வளமான புல்வளம் கொண்ட முல்லை நிலமே ஏறுதழுவுதலுக்கு உகந்த நிலமாக விளங்கியது. ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு எனப் பல பெயர்களிலும் இது அழைக்கப்படுகிறது.

சல்லி என்பது, விழாவின்போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். அதோடு, 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்திலிருந்த 'சல்லிக்காசு' என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து, மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அடக்கும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம், பிற்காலத்தில் 'சல்லிக்கட்டு' என்று மாறியது. பேச்சுவழக்கில் அது திரிந்து 'ஜல்லிக்கட்டு' ஆனது என்றும் கூறப்படுகிறது. சல்லிக்கட்டு, தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் நாளன்று விழா போல் கொண்டாடப்படுகிறது.

ஊரிலுள்ள இளைஞர்கள், காளைகளை அடக்கித் தங்கள் வீரத்தை வெளிப்படுத்துகின்றனர். காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மை; வாலைப் பிடித்தல் தாழ்மை என்பது, தமிழர் கொள்கை. கொம்பிலே உள்ளது காளையின் தெம்பு என்பதைத் தமிழர்கள் திடமாக நம்பினர். வசமாகப் பிடி கிடைத்தால் காளையின் விசை அடங்கும்; வீரம் அடங்கும்; திடமின்றி மண்ணில் சோர்ந்து விழும்.

இவ்விளையாட்டில் பங்குபெறும் காளைக்குக் கன்று பருவத்திலிருந்தே பாய்ச்சலுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. காளையின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் ஜல்லிக்கட்டுத் துணியை எடுப்பவரே வெற்றி பெற்றவர் ஆவர். காளையின் திமில் பகுதியைப் பிடித்தபடி 15 மீட்டர் தூரம் அல்லது 30 வினாடி அல்லது மூன்று துள்ளல்வரை ஓடவேண்டும். இவ்விளையாட்டில் ஈடுபடுவதற்கு நல்ல உடல் திறனும் அஞ்சா நெஞ்சமும் தேவை.



5th model qustion.indd 4 1/22/2020 2:53:56 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

21. ஏறுதழுவுதல் எதன் அடையாளமாக உள்ளது? .

அ) ☐ வீரம்

ஆ) ☐ அன்பு

இ) ☐ சோர்வு

ஈ) ☐ வருத்தம்

22. காளையின் தெம்பு எங்குள்ளது என்று தமிழர் நம்பினர்? .

அ) ☐ அதனுடைய வாலில்

ஆ) ☐ அதனுடைய திமிலில்

இ) ☐ அதனுடைய கொம்பில்

ஈ) ☐ அதனுடைய கழுத்தில்

23. முற்காலத்தில் ஏறுதழுவுதல் எங்கு விளையாடப்பட்டது? .

அ) ☐ காடு சார்ந்த இடத்தில்

ஆ) ☐ வயல் சார்ந்த இடத்தில்

இ) ☐ கடல் சார்ந்த இடத்தில்

ஈ) ☐ மலை சார்ந்த இடத்தில்

24. 'ஜல்லிக்கட்டு' பெயர்க் காரணம் என்ன? .

அ) ☐ மாட்டின் கொம்புகளில் கட்டப்படும் காசு

ஆ) ☐ மாட்டின் கால்களில் கட்டப்படும் வளையம்

இ) ☐ போட்டியாளர் மாட்டைத் தழுவிக் கட்டுவதால்

ஈ) ☐ இவ்விழா தைப்பொங்கலை ஒட்டி வருவதால்

25. இந்த ஆண்டு விளையாட்டில் மதுரையைச் சேர்ந்த நால்வர் போட்டியிட்டனர். இவர்களுள் யார் வெற்றி பெற்றவர்? .

அ) ☐ இவர் காளையின் திமில் பகுதியைப் பிடித்தபடி 5 மீட்டர் தூரம் ஓடினார்.

ஆ) ☐ இவர் காளையின் வாலைப் பிடித்தபடி 15 மீட்டர் தூரம் துரத்தினார்.

இ) ☐ காளை 3 முறை துள்ளியபோதும், இவர் திமிலை விடாமலிருந்தார்.

ஈ) ☐ காளையைத் தொட்டபடி 1 நிமிடம்வரை இவர் அதனுடன் ஓடினார்.



5th model qustion.indd 5 1/22/2020 2:53:56 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

**நிகழ்வு/ கதையைப் படித்து, 26 முதல் 30 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து எழுதுக.** 5 x 1 = 5

**சிங்கமும் கொசுவும்**

ஒருநாள் நண்பகல் வேளையில், சிங்கம் ஒன்று ஒரு மரத்தடியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. அப்போது அங்கு ரீங்காரமிட்டுக் கொண்டே ஒரு கொசு வந்தது.

கொசு எழுப்பிய ஓசையால் கண்விழித்த சிங்கம் அதனைப் பார்த்து, "என் காலால் உன்னை மிதித்துக் கொன்று விடுவதற்குள் இங்கிருந்து போய்விடு" என்று முழங்கியது.

"நான் ஏன் போகவேண்டும்? இந்த மரம்தான் எனக்கு வீடு" என்று கத்தியது கொசு.

"என்னைப் பார்த்தால் உனக்குப் பயமாக இல்லையா? எல்லா விலங்குகளும் என்னைக் கண்டால் அஞ்சி நடுங்குமே" என்று கூறியது சிங்கம்.

"இல்லை. எனக்கு அவ்வாறு இல்லை. நாம் இருவரும் சண்டை போட்டு, அதில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்று பார்க்கலாம்" என்று கூறியது கொசு.

சிங்கமும் இதற்கு ஒத்துக்கொண்டது.

கொசு வேகமாகப் பறந்து சென்று, சிங்கத்தின் மூக்கில் அமர்ந்து, அதன் மூக்கைக் கடிக்கத் தொடங்கியது.

சிங்கம், தனது பெரிய கால் பாதங்களைக் கொண்டு, கொசுவை அடிக்க முயற்சி செய்தது. ஆனால், சிங்கத்தால் தன்னைச் சொறிந்து கொள்ள மட்டுமே முடிந்தது. "போதும், போதும் நீதான் வெற்றி பெற்றாய்" என்று சிங்கம் வலியால் கதறும்வரை கொசு விடாமல் அதனைக் கடித்தது.

சிங்கத்திடம் தான் பெற்ற வெற்றியை மற்ற விலங்குகளுக்குப் பறைசாற்றுவதற்காக அங்கிருந்து பறந்து சென்றது கொசு. பெருமை பீற்றிக்கொண்டே சென்றதால், கொசு கவனம் இல்லாமல், மரக்கிளைகளின் நடுவே இருந்த சிலந்தி வலைக்குள் பறந்து சென்று, அதில் சிக்கிக் கொண்டது. பேராசை கொண்ட ஒரு சிலந்தி, அதனை உடனடியாக விழுங்கியது.

26. கொசு எங்கு வசித்தது?

அ) ☐ மரத்தில்

ஆ) ☐ புல்வெளியில்

இ) ☐ சிங்கத்தின் மூக்கில்

ஈ) ☐ சிலந்தி வலையில்

27. யாரெல்லாம் தனக்குப் பயப்படுவார்கள் என்று சிங்கம் கூறியது?

அ) ☐ மரம்

ஆ) ☐ கொசு

இ) ☐ சிலந்தி

ஈ) ☐ எல்லா விலங்குகளும்

28. தன்னுடன் சண்டையிடுமாறு சிங்கத்திடம் கொசு எதனால் சவால் விட்டது?

அ) ☐ சிங்கத்தைவிட அது பலசாலி ஆனதால்

ஆ) ☐ தன்னைப் பயமுறுத்திய சிங்கத்தின் மேல் உள்ள கோபத்தால்

இ) ☐ அவ்வாறு செய்யுமாறு மற்ற விலங்குகள் அதனிடம் கேட்டுக் கொண்டதால்

ஈ) ☐ சிலந்தியிடமிருந்து அது தப்பிக்க விரும்பியதால்



5th model qustion.indd 6 1/22/2020 2:53:56 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

29. சிங்கத்தால் ஏன் கொசுவை அடிக்க முடியவில்லை?

அ) ☐ சிங்கத்தின் பாதங்கள் கொசுவைப் பிடிக்க முடியாத வகையில் மிகப்பெரியனவாக இருந்ததால்

ஆ) ☐ தனது வலையைக் கடந்து செல்ல சிலந்தி அதை அனுமதிக்காததால்

இ) ☐ சிங்கம் தன்னைச் சொறிந்து கொள்வதில் மும்முரமாக இருந்ததால்

ஈ) ☐ கொசு அதன் கையிலும் கடித்துவிட்டதால்

30. இந்தக் கதையின் நன்னெறியைச் சிறப்பாக விளக்கும் தொடர் எது?

அ) ☐ தற்பெருமை எப்போதும் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

ஆ) ☐ வெற்றியடையும்வரை தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

இ) ☐ ஏமாற்றுபவர்கள் வெல்வதில்லை, வெற்றியாளர்கள் ஏமாற்றுவதில்லை.

ஈ) ☐ நடப்பதற்கு முன்பே ஓட முயலக்கூடாது.

**கீழேயுள்ள விளம்பரத்தைப் படித்து, 31 முதல் 35 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து எழுதுக.** 5 x 1 = 5

## கபடி விளையாட்டு மன்றம்

*அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியருக்கும் ஒரு நற்செய்தி*



**கபடி விளையாட்டு மன்றத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பயிற்சி முகாம்**

**ஏப்ரல் 26 முதல் மே 24 வரை**

இடம்: *எம்.ஜி.ஆர். விளையாட்டு மைதானம், திருச்சி.*

காலம்: *மாணவியர்க்குக் காலை 9 முதல் 10 மணிவரை*
*மாணவர்க்குக் காலை 10 முதல் 12 மணி வரை*

**வாருங்கள்! விளையாட்டு வல்லுநர்களிடமிருந்து கற்று, உங்கள் திறமையைப் பட்டை தீட்டுங்கள்!**

**8 முதல் 10 வயதினருக்கு இலவசம்!**

31. கபடி விளையாட்டுப் பயிற்சி வகுப்புகள் எங்கு நடைபெறுகின்றன?

_______________________________________________

_______________________________________________



5th model qustion.indd 7 1/22/2020 2:53:56 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

32. எத்தனை நாள்களுக்கு முகாம் நடைபெறுகிறது?

அ) ☐ சரியாக இரு நாள்களுக்கு

ஆ) ☐ சரியாக ஒரு வாரத்திற்கு

இ) ☐ சுமாராக ஒரு மாதத்திற்கு

ஈ) ☐ சரியாக ஒரு மாதத்திற்கு

33. முகாமில் யார் கற்றுக் கொடுக்கிறார்கள்?

____________________________________________________________

____________________________________________________________

34. மாணவியருக்கு எத்தனை மணி நேரம் பயிற்சி அளிக்கப்படுகிறது?

____________________________________________________________

____________________________________________________________

35. 15 வயதான விமலா 12 வயது சுந்தர், 10 வயது மோகன் பயிற்சியில் சேர விரும்பினர். இவர்களுள் யாருக்குப் பயிற்சிக் கட்டணம் இல்லை?

அ) ☐ விமலா

ஆ) ☐ சுந்தர்

இ) ☐ மோகன்

ஈ) ☐ அனைவருக்கும்

## பிரிவு – ஈ

**பின்வரும் இரு பாடல்களைப் படித்து 36 முதல் 41 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து எழுதுக.**

### கடல்

*எல்லை அறியாய் பெருங்கடலே – நீதான்*
*இரவும் உறங்காயோ? கடலே!*
*அல்லும் பகலும் அலைகடலே – உனக்கு*
*அலுப்பும் இலையோ பெருங்கடலே!*
*பொங்கு திரைகளோ? கடலே – அவை*
*புரவி நிரைதாமோ? கடலே!*
*எங்கும் உனதொலியோ? கடலே! – அன்றி*
*இடியின் முழக்கமோ? கடலே!*

36. கடலிற்கு எவை இல்லை என்கிறார் பாடலாசிரியர்? 1 x 2 = 2

____________________________________________________________

____________________________________________________________



5th model qustion.indd 8 1/22/2020 2:53:56 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

37. அலைகள் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் எவ்வாறு உள்ளன? 1 x 2 = 2

________________________________________________________________

________________________________________________________________

38. பாடலில் 'இரவும்' என்று பொருள்படும் வேறு சொல் எது? 1 x 1 = 1

அ) ☐ அல்லும்

ஆ) ☐ அலுப்பும்

இ) ☐ பொங்கும்

ஈ) ☐ எங்கும்

**கல்வி**

*கல்வியைக் கற்றிட வேண்டும் – அதைக்*
*கசடறக் கற்றிட வேண்டும்*
*வல்லமை பெற்றிட வேண்டும் – நல்*
*வளமதை எட்டிட வேண்டும்*
*கற்றிடக் கற்றிட யாவும் – நல்*
*கணக்கென நெஞ்சில் கூடும்*
*வெற்றிகள் ஆயிரம் சேரும் – புகழ்*
*வெளிச்சமும் மேனியில் ஊறும்*

39. கல்வியை எவ்வாறு கற்றிட வேண்டும் ? 1 x 2 = 2

________________________________________________________________

________________________________________________________________

40. "கற்றிடக் கற்றிட... புகழ் வெளிச்சமும் மேனியில் ஊறும்" – என்ற சொற்றொடர் குறிப்பது என்ன? 1 x 1 = 1

அ) ☐ புகழ் ஒருவர் உடலிலிருந்து தோன்றுகிறது

ஆ) ☐ கல்வி என்பது ஒளிமயமானது

இ) ☐ நன்கு கற்க நல்ல உடல் மிக அவசியம்

ஈ) ☐ கல்வி சிறிது சிறிதாக ஒருவரைப் புகழ் பெறச்செய்கிறது.

41. கொடுக்கப்பட்டுள்ள குறளை நிறைவு செய்து எழுதுக. 1 x 2 = 2

அன்புடைமை________________________________________________


________________________________________________வழக்கு



5th model qustion.indd 9 1/22/2020 2:53:56 PM
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

## பிரிவு – உ

42. பின்வரும் படத்திற்குப் பொருத்தமாக மூன்று தொடர்கள் எழுதுக. 1 x 3 = 3



________________________________________

________________________________________

________________________________________

43. உங்கள் ஊரில் நூலகம் அமைக்கவேண்டி மாவட்ட நூலகருக்கு விண்ணப்பம் எழுதுக. 1 x 5 = 5

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com